அனுப்புவதை இந்த அரசோ மாண்புமிகு உறுப்பினர்களோ ஒத்துக்கொள்ள மாட்டார்கள். அரசாங்கத்தினுடைய கொள்கையும் அதுவல்ல. அந்த ஆசிரியர்களும் பணியாற்ற வேண்டும். கிடைக்கக் கூடிய புதிய நிதியை, நிலைமையின் தேவைக்கேற்ப கூடுமான வரையில் பயன்படுத்த வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கூடலூர் அடிவாரத்தில் இருக்கிற, திரு. கோவை மோகன்.

திரு இரா. மோகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசிடமிருந்து எந்த உதவியும் எதிர்பார்க்காமல், ''டிரஸ்ட்''டின் மூலமாக, இஞ்சினியரிங் கல்லூரியோ, பாலிடெக்னிக்கோ, கலைக் கல்லூரியோ அமைப்பதற்கு யாராவது முன் வந்தால், அவர்களுக்கு அப்படிப்பட்ட கல்லூரிகளைத் துவக்குவதற்கு அரசு அனுமதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

9-15 மணி

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பொறியியல் கல்லூரியோ, பாலிடெக்னிக்கோ மேலும் அதிகமாகத் தொடங்கத் தேவையில்லை. தொடங்கினால் இப்போதுள்ள பயிற்சிபெறுகிற மாணவர்கள் எண்ணிக்கை இன்னும் அதிகமானால் அவர்களுடைய வேலையில்லாத் திண்டாட்டம் கடுமையாகும் என்ற கருத்து பொறியியல் துறை நிபுணர்களால், பேராசிரியர்களால் கூறப்பட்டிருக்கிறது. எனவே மிக இன்றியமையாத ஒரு நிலைமை, இந்தத் தொழிற்கல்வியைப் பொறுத்து மிகச் சிறந்த தகுதி பெறுமாறு நடத்துவார்கள் என்ற நம்பிக்கை ஏற்பட்டால் அது பரிசீலிக்கப்படும். கலைக் கல்லூரியைப் பொறுத்த வரையில் எந்த வட்டாரத்தில் கேட்கிறார்களோ, அந்த வட்டாரத்தைப் பொறுத்து ஆராய்ந்து அணுகப்படும்—'ஏற்றுக்கொள்ளப்படும் என்று நான் சொல்லவில்லை'—அணுகப்படும், ஆராயப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை

*2659 திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் உற்பத்தித் திறனை அதிகப்படுத்த நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஆம். ஆலையின் தற்போதைய 1,750 டன் அரவைத் திறனை 2,500 டன்களுக்கு அதிகப்படுத்த மைய அரசிடமிருந்து உரிமம் பெறப்பட்டுள்ளது.

1990 மே 8]

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இந்த ஆலையினுடைய உற்பத்தித் திறனை 2,500டன் ஆக உயர்த்துவதற்கு, மத்திய அரசு 1987 ஆம் ஆண்டு உத்தரவு வழங்கியதாக அறிகிறேன். காலதாமதம் எதனால் ஏற்பட்டு இருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், இதனால் கரும்பு உற்பத்தி எவ்வளவு ஏக்கர் அதிகமாகச் செய்யமுடியும் என்பதை அரசு அறிவிக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 1987-லே அனுமதி அளிக்கப்பட்டாலும் காலதாமதம் ஏன் என்று கேட்கிறார். காலதாமதம் இடையிலே ஏற்பட்டது என்பதை அவரே அறிவார் என்று உணருகின்றேன். இதற்கு ஏற்ப, விரிவாக்கத் திறனுக்குத் தேவைப்படும் கரும்பு 16,000 ஏக்கர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆலை விரிவாக்கத்தின் மூலமாக எத்தனை பேருக்குப் புதிய வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என்பதை அறிய விரும்புவதோடு மட்டுமல்லாமல், தமிழகத்திலே எத்தனை கரும்பு ஆலைகளை இது போன்று விரிவாக்கம் செய்வதற்கு அரசாங்கத்திடம் திட்டமிருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இப்போது 1,750 டன்னுக்கு எவ்வளவு பேருக்கு வேலை கிடைக்கிறது என்பதைக் கணக்கிட்டால், 2,500 டன் என்று அதிகப்படுத்தும் போது எவ்வளவு பேருக்கு வேலை கிடைக்கும் என்பதை எளிதாக உணரலாம்.

திரு. எஸ். சிவலோகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட இருக்கும் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் எத்தனை? எந்தெந்த ஊரில் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஒன்பது புதிய சர்க்கரை ஆலைகள் நிறுவ மத்திய அரசிடமிருந்து உரிமம் பெறப்பட்டிருக்கிறது. இதிலே ஐந்து தனியார் துறை ஆலைகள், நான்கு கூட்டுறவுத் துறை ஆலைகள். தனியார் துறையிலே, சிவகங்கை, வாசுதேவநல்லூர் இரண்டும் கடந்த ஆண்டில் அரவையைத் தொடங்கி விட்டன. திருஆரூரான், ராஜஸ்ரீ சுகர்ஸ், பெரியகுளம், இந்த ஆண்டு அரவையைத் தொடங்கி உள்ளன. கூட்டுறவுத் துறையில் சிதம்பரம், செய்யாறு, இரண்டு சர்க்கரை ஆலைகளும் இந்த ஆண்டு உற்பத்தியைத் தொடங்கும்.